# தமிழ் இலக்கியங்களில்
## சமயமும் சமூகமும்

தொகுதி – II




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் மா. சிதம்பரம்

முனைவர் சு. குமரன்

முனைவர் சு. இராமலிங்கம்

திரு. கி. பொன்னுதுரை

# தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் மா. சிதம்பரம்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்**<br>**திரு. கி. பொன்னுதுரை** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2018 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 9843273994, 7358863327 |
| பக்கங்கள் | : | XXII + 488 = 510 |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 80800 - 90 - 5**


# International Conference on Depiction of Religion and Human Society in Tamil Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. M. Chidambaram**<br>**Dr. S. Kumaran. Dr. S. Ramalingam**<br>**Mr. K. Ponnudhurai** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2018 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XXII + 488 = 510 |
| Prize | : | **Rs. 400/-** |

152. **திருமதி. மோ.கோ. சாந்தி** 786
சமயக் குரவர்களின் சமூகச் சிந்தனை

153. **முனைவர் அ. ஸ்ரீநாகபூஷணி** 790
பெரியபுராணத்தில் தேவாரங்களின் சிறப்பு

154. **முனைவர் கி. பார்த்திபராஜா** 797
சமற்கிருத மேல்நிலையிலிருந்து நாட்டார் களத்தை நோக்கிய கடவுளர்களின் நகர்வு : தெருக்கூத்து நிகழ்த்து மரபை முன்வைத்து ஒரு விவாதம்

155. **முனைவர் த. பிரியா** 804
குருதிமலைப் புதினம் காட்டும் விளிம்புநிலை மக்களின் வாழ்வியல்

156. **முனைவர் கோ. புவனேஸ்வரி** 810
சங்கத்தமிழ் தெரி செந்தில் பதி

157. **முனைவர் சோம. இராசேந்திரன்** 816
கவிஞர் பழநிபாரதியின் சமுதாயச் சிந்தனைகள்

158. **முனைவர் த. செல்வராசு** 822
திருநாவுக்கரசர் பாடல்களில் சமயமும் சமூகமும்

159. **கவிஞர். இரா. செந்தில்குமார்** 827
புதுக்கவிதையில் இன்றைய சமுதாயக் கல்வி நிலை

160. **முனைவர் க. முருகேசன்** 833
கம்பனில் இயற்கை எழிலோவியங்கள்

161. **முனைவர் மா. சிதம்பரம்** 843
சித்தாந்த வித்து திருமந்திரம்

162. **திருமதி சு. மகேஸ்வரி சிதம்பரம்** 848
ஆரூராரின் அருள்நெறி

163. **முனைவர் இரா. கீதா** 854
சங்க இலக்கியப் பாடல்களில் வரலாற்றுக் கூறுகள்

164. **முனைவர் வீ.கே. கஸ்தூரி நாதன்** 858
சித்தர்கள் காட்டும் சிவ நெறி

165. **முனைவர் ப. சு. செல்வமீனா** 864
திருநாவுக்கரசரின் பக்திநெறி

166. **முனைவர் மு. சுமதி** 869
சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்

167. **திரு. எஸ்.எல்.எஸ். பழனியப்பன்** 874
நகர வைரவன் கோயில் தலபுராணம்

# 160. கம்பனில் இயற்கை எழிலோவியங்கள்

**முனைவர் க. முருகேசன்**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029*

மனித வாழ்க்கையின் பரிணாமத்தையும், மனிதனின் ஆற்றலையும் எடுத்துரைத்த சார்லஸ் டார்வின், எதிர்காலத்தில் மனிதர்கள் சுற்றுப்புறச் சூழலைக் கெடுத்து விடக்கூடாது என அச்சம் கொண்டிருந்தார். மகாகவி கம்பனும் சுற்றுப்புறச் சூழலைக் கெடுப்பதால், மானுடம் அழிவுப்பாதையை நோக்கிச் செல்லும் என்பதை டார்வினுக்கு முன்பே உணர்த்தியிருக்கிறான். சுற்றுப்புறச் சூழல் பேணப்பட வேண்டுமானால், சோலைகளும், காடுகளும் காக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் கம்பனுக்கு இருந்திருக்கின்றது. கம்பராமாயணத்தில் காணப்படும் இயற்கை எழிலோவியங்களைப் படம்பிடித்துக் காட்ட இக்கட்டுரை முற்படுகின்றது.

## சோலைவளம் காட்டும் ஓவியங்கள்

சீதையிடம் சூடாமணியைப் பெற்றுக்கொண்ட அனுமன் இராமதூதனாகிய தான் வந்துசென்றதை ஏதாவது ஒரு வகையில் இலங்கை வேந்தனுக்குக் காட்டிவிட்டுத்தான் செல்ல வேண்டுமென்ற எண்ணத்தில் அசோக வனத்தை அழிக்கத் தொடங்குகின்றான். ஒரு நாட்டின் செல்வ வளத்தைக் கணக்கிடுவதானால் அங்குள்ள சோலைகள், ஆறுகள், தாமரைத் தடாகங்கள், கொட்டும் நீர் அருவிகள், செழிப்புடைய தாரவங்கள், விலங்குகள், பறவையினங்கள் ஆகியவை கணக்கில் கொள்ளப்பட வேண்டும். அரக்கரைப் போருக்கு அழைக்கும் உபாயத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமன், அசோக வனத்து மரங்களை அழித்த தன்மையை,

> "*வேரொடு மறிந்த சிலஞு வெந்த சிலஞு விண்ணில்*
> *காரொடு செறிந்த சிலஞு காலினொடு வேலைத்*
> *தூரொடு பறித்த சிலஞு தும்பியொடு வானோர்*
> *ஊரொடு மலைந்த சிலஞு உக்க, சில நெக்க*"
> *(கம்ப., சுந்தரக்காண்டம், பா.5438)*

எனப் பாடுகின்றார் கம்பர். அனுமனால் வீசி எறியப்பட்ட மரங்கள் ஆகாயத்தில் தாக்கின. தாக்கப்பட்ட நட்சத்திரங்களோடு, மரங்களிலிருந்த வெண்ணிறப் பூக்கள் வேற்றுமை தெரியாமல் மயங்கிக் கீழே உதிர்ந்தன. சில மரங்கள் மதங்கொண்ட எட்டுதிக்கு யானைகளின்